# பொருநர் ஆற்றுப்படையின் சிறப்புகள்

# Characteristics of the Porunar River Army

**ச. பிரபாகரன்**
உதவிப் பேராசிரியர்
இளநிலைத் தமிழ்த்துறை
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி
(தன்னாட்சி) சிவகாசி

**S. Prabhakaran**
Assistant Professor
UG Tamil Department
Ayya Nadar Janaki Ammal College
(Autonomous), Sivakasi

**ஆய்வுச் சுருக்கம்**

பொருநர் ஆற்றுப்படை நுலின் பாட்டுடைத் தலைவன் கரிகால் பெருவளத்தான். இவன் மிகச் சிறந்த போர் வீரன் தலைசிறந்த மன்னன் தன்னை நம்பி வருபவர்களுக்கு என்றும் துணையாக நிற்பவன். தன் நாட்டில் உள்ள பொருநர்களுக்கு மட்டும் உதவி செய்யாமல் தன்னை நம்பி வரும் பக்கத்து நாட்டு பொருநனுக்கும் உணவு பரிசு வழங்கும் குணம் உடையவன் கரிகால் பெருவளத்தான். உணவு மற்றும் பரிசு வழங்குவதில் பல வேறுபாடு இவனிடம் காணப்பட்டது. தன்னை நம்பி வரும் பொருநர்களுக்கு முதலில் பாம்பின் தோலை விட மெல்லிய ஆடையை வழங்கி பின்பு பசி களைப்பு நீங்கும் வரையில் கள் கொடுத்தல் உணவில் சலிப்பு ஏற்பட்டால் வேறு வேறு உணவுகளை வழங்கும் அரசனைப் பற்றி பொருநர் ஆற்றுப்படையில் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார் ஆசிரியர். இக்கட்டுரையில் யாழின் வருணனை அரசனின் விருந்தோம்பல் சிறப்பு அரசன் உணவு கொடுத்த முறை கரிகால் வளவன் சிறப்புகள் வெண்ணிப் போர் வெற்றி கரிகாலனது கொடைச் சிறப்பு சோழ நாட்டின் வளமும் அழகும் காவிரி நாட்டு

**Abstract**

*Karikal peruvalathan, the hero of the book Porunaratrupadai. He is a great warrior, a great king, and one who will always stand by those who believe in him. Karikal Peruvalan is a person who gives food and gifts not only to the people of his country but also to the neighbouring countrymen who trust him. There were many differences in food and gifts. In the Porunaratrupadai, the author has clearly explained the king who gives clothes thinner than the skin of a snake to the men who believe in him, and then gives them toddy until the hunger and tiredness are gone, and if they are bored with food, he gives different foods. In this article, we will see the description of Yaazh, the king's hospitality, the manner in which the king provided food, the merits of Karikal Valavan, the victory of the Battle of Venni, the gifts of Karikalan, the prosperity and beauty of the Chola country, and the vayal of Kaveri nadu.*

*வயல்வளம் போன்ற பொருநர் ஆற்றுப்படையின் சிறப்புக்களை இக்கட்டுரை வழியாக காணலாம்.*

***முக்கியச் சொற்கள்:***

*கரிகால் பெருவளத்தான், பொருநர் ஆற்றுப்படை, வெண்ணிப் போர், சோழநாடு*

***Keywords:***

*Karikal Peruvalathan, Chola Country, Yaazh, Venni, Porunaratrupadai*

**Citation**

Prabhakaran, S. "Charasteristics of the Porunar River Army." *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 2, 2022, pp. 27–34.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20136059*

**முன்னுரை**

*சங்ககால நுல்களில் பதிணென் மேற்கணக்கு மற்றும் பதிணென் கீழ்க்கணக்கு ஆகிய நுல்கள் மிக முக்கியமானதாகும். எட்டுத்தொகை நுல்களில் ஆற்றுப்படை நுல்கள் உள்ளன. அதைப்போல் பத்துப்பாட்டில் ஐந்து பாட்டுகள் ஆற்றுப்படை நுல்கள் அமைந்துள்ளன. பிற்காலத்தில் ஆற்றுப்படை நுலைத் தமிழில் சிற்றிலக்கியங்கள் என்றும் வடமொழியில் பிரபந்தங்கள் என்றும் வழங்கலாயினர். இதனைப் பாட்டியல் வகைகளுள் ஒன்றாக்கினர். ஆற்றுப்படுத்துதல் என்பது வழிப்படுத்துதல் என்னும் பொருள் உடையது. இந்த ஆற்றுப்படை நுல்களில் ஒன்றான பொருநர் ஆற்றுப்படையின் சிறப்புகளை இக்கட்டுரை வழியாக காணலாம்.*

**ஆற்றுப்படை**

*ஆற்றுப்படை என்பது விறலியர் பாணர்த்தர் பொருநர் என்போர் தமது வறுமையைப் போக்க வள்ளல்களிடம் சென்று பொருள் பெறுவது அக்கால வழக்கம். அவ்வாறு பரிசு பெற்றுச் செல்லும் மேற்றிய நால்வகைப் பிரிவினருள் ஒருவன் பரிசு பெறச் செல்லும் இன்னொருவனை வழிபடுத்தும் முறையில் அமைவதே ஆற்றுப்படை ஆகும். அகவற்பாக்களாக அமையும் இப்பாடல்கள் தலைவனின் புகழ் கொடை கொற்றம் ஆகியவை பற்றி எடுத்துக் கூறுவதாக அமையும்.*

**ஆற்றுப்படைப் நுல்கள்**

***திருமுருகாற்றுப்படை***
***பொருநராற்றுப்படை***
***சிறுபாணாற்றுப்படை***
***பெரும்பாணாற்றுப்படை***
***கூத்தராற்றுப்படை***

**பொருநராற்றுப்படை சிறப்பு**

*பொருநராற்றுப்படையை பாடியவர் முடத்தாமக்கண்ணியார் இவரை பெண்பாற்புலவர் என்ற கருத்தும் உண்டு. இவர் சங்கஇலக்கியத்தில் இந்த ஒரு பாடலை மட்டும் பாடியுள்ளார். ஆதனால் இவரைப் பற்றிய செய்திகள் மிகுதியாகத் தெரியவில்லை. பரிசில் பெற்றுத் திரும்பும் பொருநன் பரிசில் பெறச் செல்லும் பொருநனை வழிப்படுத்துகின்ற பாடல் பொருநர் ஆற்றுப்படை. பொருநராற்றுப்படையின் தலைவன் கரிகால் பெருவளத்தான் இவன் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து அரசாண்டவன் எனப் பட்டினப்பாலை கூறுகிறது. இவன் சோழன் உருவப்பல்தேர் இளஞ்சேட் சென்னியின் புதல்வன். இளமையில் நெருப்பால் சுடப்பட்டதால் கால்கரியாயிற்று. என்பதால் கரிகாலன் என்ற பெயரைப் பெற்றதாகவும் கூறுவர். கரிகாலனின் பொன்னையும் பொருளையும் வாரி வழங்கும் பண்பும் வெண்ணிப் போரில் வெற்றியும் வறுமை கோலத்தோடு விளங்கிய ஆடையை நீக்கி பாம்பின் தோல் போன்ற மெல்லிய ஆடையை கரிகாலன் வழங்குவான் என புகழ்கின்றார். சோழநாடு என்னும் நிலையில் பொருநராற்றுப்படை காவிரியின் சிறப்பை நயம்பட எடுத்துரைக்கின்றது.*
*பாலை யாழின் வருணனை*

*யாழுக்குப் பத்தல்தோல் போர்வை ஆணி தண்டு வார் க்கட்டு போன்ற பல உறுப்புக்கள் உள்ளன. மானின் குளம்பு பதிந்த தடம் போன்று இருபுறமும் தாழ்ந்து நடுவில் உயர்ந்திருந்தது பத்தல். விளக்குச் சுடரின் நிறம் போன்று அமைந்திருந்தது. இழுத்துக் கட்டபட்ட தோல் இளம்லை உடைய பெண்ணின் வயிற்றில் படர்ந்த மென்மையான ரோமம் போன்று இரு பகுதிகளையும் இணைத்துப் பொதித்த போர்வை இருந்தது. இவற்றை இணைத்து இறுக்கிய ஆணி நண்டின் கண் போன்று இருந்தது. எட்டாம் திங்களின் வடிவை ஒத்திருந்தது. உள்நாக்கு இல்லாத வாய். கரும்பாம்பு தலை துக்கி நின்றது போன்று இருந்தது தண்டு. தண்டை இறுக்கிக் கட்டிய வார்க்கட்டு அழகிய பெண் முன்கையில் அணிந்திருந்த வளையல் தொடர்ச்சியை ஒத்து இருந்தது. யாழின் நரம்புகள் குத்தப்பெற்ற தினை அரிசியைப் போன்று இருந்தன. யாழினை விலங்கு விளக்கு பாம்பு நிலவு ரோமம் நண்டு வளையல் போன்றவற்றுடன் ஒப்பிட்டுவதை*

***விளக்குஅழல் உருவின் விசிஉறு பச்சை***
***எண்நாள் திங்கள் வடிவிற்று ஆகி***
***பாம்புஅணந் தன்ன ஓங்குஇரு மருப்பின்***
***வேய்வை போகிய விரல்உளர் நரம்பின் (பொரு. ப. 62)***

*என்ற பாடல் வரிகள் வழியாக யாழின் வருணனையை அறியமுடிகின்றது.*

**அரசனின் விருந்தோம்பல் சிறப்பு**

*கரிகால் பெரவளத்தான் தன் நாட்டிற்கு வரும் பொருநர்களைப் பார்த்ததும் முன்பு நட்புக் கொண்டவர்களைப் போல அரவணைப்புடன் செயல்பட்டான். அரசன் பொருநன் என்ற வேறுபாடு இல்லாமல் அவன் அருகில் நிருத்திக் கொண்டான். அவன் பார்த்த பார்வை எங்கள் எலும்புகளை எல்லாம் குளிரச் செய்தது. நாங்கள் கட்டியிருந்த ஆடை வேர்வையால் நனைந்து கிழிசலைத் தைத்திருந்த இடங்கள் தெரியரும் பேனும் இணைந்திருந்த மிகவும் அழுக்காக இருந்தன. அதை உடனே நீக்கிவிட்டுப் பாம்பின் தோல் போன்ற மிகவும் மென்மையான பார்த்தால் இழைதெரியாத பூத்தொழிலையுடைய அழகான ஆடையை எங்களுக்குத் தந்தான். மேகம் போன்ற கரிய கூந்தலையுடைய மகளிர் எங்களுக்குப் பொற்கலங்களில் தேறலை ஊற்றித் தந்தனர். ஒருமுறை இல்லை பலமுறை தந்தனர். அதை மகிழ்வோடு உண்டு எங்கள் வழித்துன்பம் அனைத்தையும் போக்கி மகிழ்ந்திருந்தோம். இதனை*

***கேளிர் போல கேள்கொளல் வேண்டி***
***வேளாண் வாயில் வேட்பக் கூறி***
***கண்ணில் காண நண்ணுவழி இரீஇ***
***பருகு அன்ன அருகா நோக்கமொடு***
***..........***
***மழைஎன மருளும் மகிழ்செய் மாடத்து (பொரு.பக்.68)***

*என்ற பாடல் வரிகள் கரிகால் பெரவளத்தானின் விருந்தோம்பல் சிறப்புகளை எடுத்துரைக்கின்றன.*

**கரிகாலன் உணவு கொடுத்த முறை**

*கரிகால் வளவன் காலம் அறிந்து செயல்படக் கூடியவன். அறுகம்புல்லைத் திரித்துக் கயிறாக்கிய பழுதைத் தின்றுகொழுத்த செம்மறிக் கிடாயின் புழுக்கிய இறைச்சியைத் தந்தான். அத்துடன் செம்மறிக்கிடாவின் தொடை இறைச்சியைச் சுட்டு அச்சூட்டு இறைச்சியையும் சுடத் தந்தான். சூட்டின் காரணமாக இடப்பக்கமும் வலபக்கமும் வாயில் மாற்றி மாற்றிச்*

*சூட்டைக் குறைத்து உண்டோம். இவ்விறைச்சி உணவு எங்களுக்கு வேண்டாம் என்ற நிலை ஏற்பட்டபோது சுவையான இனிமையான பலவகைகளான பணியாரங்களைத் தந்தான். வற்புறுத்தி உண்க உண்க என ஊட்டினான். பின்பு செறிவு அமைந்த மத்தளத்தை இயக்கி சிறந்த யாழையும் இயக்கி விறலியரை இசைபாடச் செய்து ஆடச் செய்து கள்ளும் தந்து எங்களை மகிழ்வித்தான். இவ்வாறு ஒரு நாள் மட்டும் இவ்வாறு உணவு கொடுக்கவில்லை பல நாட்களாக வழங்கினான். ஒரு நாள் அரிசி உணவு உண்க என்று கூறி வரியும் முரிவும் இல்லாத வளமான அரிசியால் சமைத்த விரல் போன்ற நிமிர்ந்த சோற்றையும் பருக்கைக் கற்கள் போன்று நன்கு பொரிகப்பட்ட பொரிக்கறியையும் தந்து உணவைச் செய்தான் கழுத்துவரை உண்டோம். இவ்வாறு இறைச்சி பணியாரங்கள் அரிசிச்சோறு இவற்றை மாற்றி மாற்றி உண்டு. பற்கள் எல்லாம் கொல்லையை உழுத கலப்பையின் கொழுவைப் போன்று மழுங்கிவிட்டன. இவ்வாறு பல் மழுங்கிய அளவுக்கு உணவு கொடுத்த அரசன் கரிகாலன் பெருவளத்தான். இதனை*

***காழின் சுட்ட கோழ்ஊன் கொழுங்குறை***
***ஊழின் ஊழின் வாய்வெய்து ஒற்றி***
***அவைஅவை முனிகுவம் எனினே சுவைய***
***வேறுபல் உருவின் விரகு தந்து இரீஇ***
***(பொரு.பக்.69)***

***பரல் வறைக்கருனை காடியின் மிதப்ப***
***அயின்ற காலை பயின்று இனிதுஇருந்து***
***கொல்லைஉழு கொழு ஏய்ப்ப பல்லே***
***(பொரு.பக்.70)***

*என்ற பாடல் வரிகள் வழியாக அரசன் கொடுத்த முறையை அரியமுடிகின்றது.*
*கரிகாலன் வழங்கிய பரிசுப் பொருள்*

*கரிகாலன் தன் அரண்மனையில் உள்ள பொருநனைப் பார்த்து நீங்கள் ஊர் செல்ல விரும்புகின்றீர்களோ என்று சினந்தவன் போன்று எங்களை நோக்கித் துடி போலும் அடிகளை உடைய யானைக்கன்றுகளையும் பெண்யானையையும் ஆண்யானையையும் பல வகைப்பரிசில் பொருள்களையும் எடுத்துக் கொள்க எனத் தந்தான். அவன் தகுதிக்குத் தக மிகுதியாகத் தந்தான். நாங்கள் எங்கள் குறைகள் நீங்கும் அளவில் வேண்டியவற்றை எடுத்துக்கொண்டு வறுமை தீர வந்து சேர்ந்தோம் என்று பொருநன் றினான் வழிகாட்டுகின்ற பொருநன். ஒரு மன்னன் தன்னிடம் வறுமை என்று வருபவர்களுக்கு உணவு மட்டும் கொடுக்காமல் ஆடை பரிசுப் பொருள் ஆகியவற்றையும் வழங்கினான். இதனை*

***துடிஅடி அன்ன துங்குநடைக் குழவியொடு***
***பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்க! என***
***தன்அறி அளவையின் தரத்தர யானும்***
***..........***
***இன்மைதீர வந்தனென் (பொரு.பக்.71)***

*என்ற பாடல் வரிகள் கரிகாலனின் பரிசு வழங்கியதை எடுத்துரைக்கின்றது.*

**கரிகால் பெருவளத்தானின் சிறப்புகள்**

*கரிகால் பெருவளத்தான் அழகிய வடிவுடைய பல தேர்களையுடைய இளஞ்சேட் சென்னியின் புதல்வன். முருகனைப் போன்ற சினத்தை உடையவன். முருகனைப் போன்ற அழகுடையவன். இவன் தாய் வயிற்றில் இருக்கும் போதே தந்தை இறந்துவிட்டதால் அரசு உரிமையைப் பெற்றவன். இளம் வயதில் இவனை அறியாதவர்களும் இவன் கூறியவதைக் கேட்கும் நிலையில் ஆற்றல் உடையவனாக இருந்தான். பகைவா்களுடைய தேசத்திலும் இவனுடைய வலிமை காரணமாகப் புகழைப் பெற்றான். இவ்வுலகில் தன்னுடைய கதிர்களைப் பரப்பி ஒளியைச் செய்கின்ற கதிரவன் போன்று பிறந்து தவழ்கின்ற காலம் தொட்டுத் தன் நாட்டைத் தன் வலிமையால் சுமந்து கொண்டு நாள்தோறும் வளர்த்தான். இதனை*

***உருவப் பல்தேர் இளையோன் சிறுவன்***
***முருகற் சீற்றத்து உருகெழு குருசில்***
***தாய் வயிற்றிருந்து தாயம் எய்தி***
***..........***
***நாடுசெகிற் கொண்டு நாள்தொறும் வளர்ப்ப (பொரு.பக்.71)***

*என்ற பாடல் அடிகள் வழியாக கரிகால் பெருவளத்தானின் சிறப்புகளை எடுத்துரைக்கின்றது.*
*வெண்ணிப் போர் வெற்றி*

*கரிகால் பெருவளத்தான் யாளியின் குட்டி போன்ற வலிமை உடையவனாக இருந்தான். பால்குடி மறவாத காலத்திலேயே மிகுந்த வலிமையோடு முதல் வேட்டையாக வெண்ணிப் பறந்தலை என்ற இடத்தில் பனம்பூவைச் சூடிய சேரனையும் வேப்பமாலையை அணிந்த பாண்டியனையும் ஒரே நேரத்தில் வென்று வாகை சூடினான். அத்தகைய ஆற்றல் உடையவனாக கரிகால் விளங்கினான். இதனை*

***ஆளிநன் மான் அணங்குடைக் குருளை***
***மீளி மொய்ம்பின் மிகுவலி செருக்கி***
***..........***
***கண்ஆர் கண்ணி கரிகால் வளவன் (பொரு.பக்.72)***

*என்ற பாடல் வழியாக வெண்ணிப் போர் வெற்றியை அறியமுடிகின்றது.*

**கரிகாலனது கொடைச் சிறப்பு**

*கரிகால் பெருவளத்தானை காணச் சென்றால் உங்களுக்கு எல்லா உதவிகளையும் செய்வான். குரிகாலனின் பார்வை கன்றைப் பெற்ற பசு பார்க்கின்ற பார்வை போன்று மிகவும் விருப்பத்தோடும் அன்போடும் பார்ப்பான். பொருநன் இசைக்கும் இசையைக் கேட்பதற்கு முன்பாகவே பொருநனின் அழுக்காடைகளை நீக்கி பட்டாடையை உடனெ தருவான். பொன்கலத்தில் உங்களுக்கு உணவு தருவான் இனிய மணமுடைய சுவையான கள்தெளிவையும் தருவான். நாங்கள் வேண்டாம் வேண்டாம் என்று சொன்னாலும் தினந்தோறும் தந்து கொண்டே இருப்பான். பாணர்க்கு பொன் தாமரைப் பூக்களை அவர்கள் தலையில் அவனே சூடுவான். யானைக் கொம்பால் செய்த தாமரை மொட்டை உடைய பெரிய தேரில் பால் போன்ற வெண்மையான நான்கு குதிரைகளைப் பூட்டி உங்களை அனுப்புவான். அனுப்பும் போது அவன் தேருக்குப்பின் ஏழு அடி நடந்து வந்து உங்களை வழி அனுப்புவான. இதனை*

***பால்புரை புரவி நால்குஉடன் பூட்டி***
***காலின்ஏழ் அடிப்பின் சென்று கோலின்***

*..........*

***தரவிடைத் தங்கல்ஓ விலனே வரவிடைப் (பொரு.பக்.73)***

*என்ற பாடல் வரிகள் கரிகாலனது கொடைச் சிறப்பினை எடுத்துரைக்கின்றது.*

**சோழ நாட்டின் வளமும் அழகும்**

*சோழநாடு கிழக்குக் கடற்கரையைச் சார்ந்து உள்ளது அதனால் கடல் அலைகளின் ஓசை மிகுதியாக இருந்தது. கடற்கரையை ஒட்டிய மருத நிலத்தில் ஒவ்வொரு மா அளவு நிலத்திலும் மிகுதியாக விளைச்சல் இருந்தது. மருதநிலத்து மக்கள் காக்கைக்குச் சிவந்த பலிசோற்றைச் சிதறினர். ஆதை உண்ட காக்கை சோற்றுணவை வெறுத்தன. கடற்கரை அருகே நொச்சி மரங்கள் ழ்ந்த வீடுகளில் ஆமைகள் குட்டிபோட்டு அதைப் பாதுகாத்தன. அந்த ஆமைக்குட்டியை மருதநிலத்துக் காக்கைகள் உண்பதற்காகப் பாதுகாத்து வைக்கும். இதனை*

***மா மாவின் வயின் வயின் நெல்***
***தாழ் தாழைத் தண் தண்டலை***
***மனை நொச்சி நிழல் ஆங்கண்***
***ஈற்றுயாமை தன் பார்ப்பு ஓம்பவும் (பொரு.பக்.74)***

*என்ற பாடல் அடிகள் சோழ நாட்டின் வளத்தை எடுத்துரைக்கின்றது.*

**காவிரி நாட்டு வயல்வளம்**

*காவிரி நாடானது மிகுதியான நீர் வளம் இருப்பதால் வயல்கள் நன்றாக விளைந்தன. வளைந்த கதிர் அறுவாளால் நெல்லை அரிந்தனர். அரிந்த நெல்லை மலைபோன்று குவித்தனர். நாள்தோறும் எடுக்க எடுக்கக் குறையாது குன்றுபோன்று அந்நெற்குவியல்கள் காணப்பெற்றன. மூடைகளில் கட்டிக் குவித்திருந்தனர். எங்கும் இடம் இல்லாத நிலையில் நெல் குவிக்கப்பட்டு இருந்தது. ஒருவேலி நிலம் ஆயிரம் கலம் நெல்லைத் தந்தது. அத்தகைய வளத்தைத் தருகின்ற காவிரி ஆற்றைப் பாதுகாக்கின்ற சோழநாட்டை உடைய தலைவன் கரிகால் பெருவளத்தான். இதனை*

***கூனி குயத்தின் வாய்நெல் அரிந்து***
***சூடு கோடாகப் பிறக்கி நாள்தொறும்***
***குன்றுஎனக் குவைஇய குன்றாக் குப்பை***
***..........***
***காவிரி புரக்கும் நாடுகிழ வோனே (பொரு.பக்.78)***

*என்ற பாடல் அடிகள் வழியாக காவிரி நாட்டின் வயல்வளத்தை அறியமுடிகின்றது.*

**முடிவுரை**

*இக்கட்டுரையில் கரிகால் பெருவளத்தானின் சிறப்புகள் கொடைத் தன்மை அவனது வீரம் நாட்டின் வளம் கரிகாலன் உணவு கொடுத்த முறை அரசனின் விருந்தோம்பல் சிறப்பு ஆகியவற்றையும் பொருநர் ஆற்றுப்படையின் சிறப்பைப் பற்றியும் இக்கட்டுரை வழியாக அறியமுடிந்தது.*

**துணை நின்ற நூல்கள்**

1. *பத்துப்பாட்டு – மூலமும் உரையும் ச.வே.சுப்பிரமணியன் கோவிலூர் மடாலம் கோவிலூர், 2003.*
2. www.wikipedia.com

## References

1. Subramanian, S.V., Pathuppattu, Moolamum Uriyum, Koviloor Madalam, Koviloor, 2003.
2. www.wikipedia.com